டி.வி.சி எண்.3/2022 நாள்: 10.05.2024

ம.சா.2 சித்ரா

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் வீட்டு குடித்தனம் செய்துவருகிறேன். வேறு எதுவும் பார்க்கவில்லை. நான் 1ம் மனுதாரருக்கு ஆதாரவாக பொய்யான தகவலை சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் 28 1/2 பவுன் நகைகள் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 1ம் மனுதாரருக்கு 28 1/2 பவுன் நகைகள் கொடுத்ததற்கு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. ம..சா.ஆ.13ல் உள்ள குழந்தைகள் யார் என்றால் 2 மற்றும் 3ம் மனுதாரர்கள் 2ம் எதிர்மனுதாரரும் அதில் உள்ளார். ம..சா.ஆ,13 எந்த ஆண்டு எடுக்கப்பட்டது என்றால் வருடம் ஞாபகமில்லை. ம..சா.ஆ.13ற்கு நெகட்டிவ் இல்லை என்றால் சரிதான். 28 1/2 பவுன் நாங்கள் வாங்கியதற்கு ரசீது ஏதும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.ஆனால் மொய் நோட்டில் மட்டும் நகை பற்றி விவரங்கள் உள்ளது.

3. சீர்வரிசை மற்றும் நகைகள் வழக்கிற்காக பின்தேதியிட்டு தயார் செய்யபட்டது என்றால் சரியல்ல. ம..சா.ஆ.2ல் எனது கையெழுத்தோ, எதிர்மனுதாரர் கையெழுத்தோ இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.2ஐ எழுதிய நபரின் பெயரை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சொந்தகாரர் யாராவது விசேசத்திற்கு வந்தவர்கள் எழுதியிருப்பார்கள். ம.சா.ஆ.2 வழக்கிற்காக திட்டமிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

4. 1ம் மனுதாரர் தனது நகைகளை அடகு வைத்தும், வீடு வாடகைக்கு பிடித்தும், அவரது குழந்தைகளுக்கு கல்வி செலவு செய்துவருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் பார்த்து வருகிறோம். நான் நிருபண வாக்கு மூலத்தில் எனது மகள், அவருடைய நகைகளை அடமானம் வைத்து எனது வீட்டு அருகே வாடகை வீடு பிடித்து வாழ்ந்து வருகிறார் என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், ஆனால் வளையல் மற்றும் தாலிச்செயினை வைத்து குழந்தைகளை படிக்கவைக்கிறார்.

5. 2021ம் வருடம் டிசம்பர் மாதம் 1ம் எதிர்மனுதாரர் வெளிநாட்டிலிருந்து வந்தாரா என்றால் வந்தார். தேவகோட்டையில் உள்ள

அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 1ம் மனுதாரரின் நடவடிக்கை சரியில்லை என்று சொல்லி 1ம் எதிர் மனுதாரர் கடந்த 26.12.2021ம் தேதி புகார் கொடுத்துள்ளார் என்றும், அப்போது விசாரணைக்கு ஆஜரான 1ம் மனுதாரர் தான் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என எழுதிக்கொடுத்துவிட்டு, மேலும் சீர்வரிசை பொருட்களை நல்லமுறையில் பெற்றுசென்றுவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் மனுதாரருடன் நன்றாக தான் குடும்பம் நடத்தினார். 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரிடம் 1ம் மனுதாரர் தவறாக இருக்கிறார் என்று சொன்னதால் 1ம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரை அடித்து தள்ளிவிட்டார். மேலும் அவர் அப்போது குடித்து இருந்தார்.

6. நான் 1ம் எதிர்மனுதாரர் வெளிநாட்டிலிருந்த வந்த பின்னர் 1ம் மனுதாரருடன் 15 நாட்கள் சந்தோசமாக இருந்தார் என்றும், மேலும் 1ம் மனுதாரரை மதுபோதையில் அடித்து காயப்படுத்தினார் என்றும், அதற்கு அவர் காரைக்குடி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார் என்று முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நிருபண வாக்குமூலத்தில் 1ம் மனுதாரர் 2020ம் வருடம் முதல் தனியாக வாழ்ந்து வருகிறார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.நான் தான் பக்கத்தில் இருந்து பார்த்துகொண்டிருக்கிறேன்.

7. நான் 21.11.2019ம் தேதி 1ம் மனுதாரர் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். 1ம் மனுதாரர் திருமணம் ஆனபின்னர் தானாவயலில் குடியிருந்தார் என்றும், அவர் குடியிருந்து வீட்டருகே அங்குச்சாமி என்பவர் குடியிருந்த வந்தார் என்றால் சரிதான். அங்குச்சாமி என்பவருக்கு கார்த்திக் என்ற மகன் உள்ளாரா என்றால் ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளார் ஆனால் பெயர் தெரியாது.

8. எனக்கு அங்குச்சாமி மகன் பெயர் கார்த்திக் என்றும், அவரது மருமகள் பெயர் பானுப்பிரியா தெரியும் என்றும், நான் வேண்டும் என்றே தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. அங்குச்சாமி மற்றும் செந்தில்நாதன் என்பவர் எங்கள் வீட்டிற்கு வந்து கார்த்திக் என்பவரிடம் எனது மகள் வாழ்ந்து வருவதாக சொல்லி பஞ்சாயத்து பேசினார்களா என்றால் இல்லை. எனது மகள் செக்காலை பேக்கரி அருகே மொபைல் சர்வீஸ் கடை நடத்திவந்தார் என்றால் இல்லை, வேலைக்கு தான் சென்றார், அங்கு 2ம் எதிர்மனுதாரர் சென்று

எனது மகள் சரியில்லாதவர் என சொல்லியுள்ளார். மனஉளைச்சலில் தான் 1ம் மனுதாரர் வேலைக்கு செல்லவில்லை.

9. திருமணத்தின்போது எனது மகளுக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் அணிவித்த மொத்த நகைகள் 10 பவுன் நகை தான் என்றும், மேற்படி நகைகள் அனைத்தும் 1ம் மனுதாரரிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பற்றி எனது நிருபணவாக்குமூலத்தில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவர் தவறாக நடந்து கொண்டதால் தான் சொன்னேன். 2ம் எதிர்மனுதாரர் வயதான நபர் என்றும், அவரை அவமானப்படுத்துவதற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. 1ம் எதிர்மனுதாரர் 1,40,000ற்கு எந்த வேலையும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அப்படி சொல்லிதான் எங்களிடம் பெண் கேட்டார்கள். 1ம் எதிர்மனுதாரருடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் அவரையும் சேர்த்து நான்கு நபர்கள். இவ்வளவு பிரச்சனைக்கும் 1ம் மனுதாரர் கார்த்திக்குடன் தவறாக இருந்தது தான் காரணம் என்றால் சரியல்ல. எனது மகள் நிறைய பசங்கள் மற்றும் வயதான நபர்களுடன் தவறாக நடப்பதாக 2ம் எதிர்மனுதாரர் சொல்லிவருகிறார்.

11. நான் எனது மகளை பற்றி தவறாக சொல்லியிருந்தால் காவல்நிலையத்தில் புகார்கொடுத்திருப்பேன் என்றும், உண்மை என்பதால் தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் கொடுத்துள்ளேன். எனது மகள் குடியிருந்த வீடு அருகே உள்ளவர்களையும், எனது வீடு அருகே உள்ளவர்களையும் விசாரித்தால் உண்மையான பிரச்சனை தெரியும் என்றால் விசாரித்து தெரிந்துக்கொள்ளுங்கள். எனது மகள் தவறாக நடப்பதாக யார் சொன்னது என்றால் 1ம் எதிர்மனுதாரர் சொன்னார். வேறு யாரும் சொல்லவில்லை.

12. 1ம் மனுதாரருக்கு 6பவுன் தங்கச்செயினும், ஒரு பவுன் தாலியும் அணிவித்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான்கு பவுன் வெளிநாட்டு செயின், ஒருபவுன் தாலி தான் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எனது மகளான 1ம் மனுதாரருக்கு அணிவிக்கப்பட்டது. நான் பொய்யாக பீரோ உடைந்து கிடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலீசாரிடம் புகார் கொடுத்த பின்னர் 2021ம் வருடம் டிசம்பர் மாதத்திற்கு முன்னாலிலிருந்து 1ம் மனுதாரர் அவர் விருப்பத்தின் படியே 1ம் எதிர்மனுதாரருடன் வாழ விருப்பம் இல்லாமல் தனியாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல.

13. 1ம் மனுதாரரின் தவறான நடத்தையால் 1ம் எதிர்மனுதாரர் அவரது குடும்பத்திற்கு கிராமத்தில் தலை குணிவு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்களின் செய்கையால் எங்களுக்கு தான் தலைகுணிவு ஏற்பட்டுள்ளது. 2ம் மனதாரர் வயது பூப்பெய்துவிட்டார் என்பதைப் பற்றி 1ம் எதிர்மனுதாரருக்கு சொல்லவில்லை என்றால் 1,2 மனுதாரர்கள் போன் செய்துள்ளார்கள், ஆனால் கேக்காதது போல் ஹலோ ஹலோ என சொல்லி கட் செய்துவிட்டார்.

14. 1ம் எதிர்மனுதாரர் 2,3 மனுதாரர்களை தந்தை என்ற முறையில் பார்ப்பதற்கு தயாராக உள்ளார் என்றும், இந்த வழக்கு நிலுவையில் உள்ளதாலும், மேலும் ஏதாவது வழக்கு தொடுத்துவிடுவோம் என்பதால் பார்ப்பதற்கு பயப்படுகிறார் என்றால் சரியல்ல. எனது மகளின் பெயரில் வங்கி வரவு செலவு கணக்கு உள்ளது, 1ம் மனுதாரருக்கு ஸ்கூட்டி என்ற வாகனம் உள்ளது என்றால் எனது மகன் வாங்கிகொடுத்த ஸ்கூட்டி உள்ளது. எனது மகளின் குற்ற நடவடிக்கைகளை மறைத்து நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u> இல்லை.**

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.